**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**MC No.43/2015**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Vinodhini | Prosecution | P.W- 1 Chief |
| Husband Name | Manavalan | Defence | |
| Village | Valuthalikudi, Radhnallur post | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 35 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.01.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் மனுதாரார் ஆவேன். எதிர்மனுதாரர் எனது கணவர். என் எணவர் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் மனுவில் கோரிய பரிகாரத்தை எனக்கு வழங்கியும் எதிர்மனுதாரர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

20.04.2014 தேதிய எனது திருமண பத்திரிக்கை அசல் தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சமூக நலத்துறை அதிகாரி தாக்கல் செய்துள்ள விசாரணை அறிக்கை அசல் **ம.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மா.சா.ஆ.2 எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகறிது)**

01.02.2015 ஆம் தேதியிட்ட எனது முதல் குழந்தை கணேஷ்ராம் பிறப்பு சான்றிதழ் **ம.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

04.12.2017 ஆம் தேதியிட்ட எனது இரண்டவது குழந்தை வசந்தரூபன் பிறப்பு சான்றிதழ் **ம.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

04.12.2017 ஆம் தேதியிட்ட எனது மூன்றாவது குழந்தை வசந்தரூபன் பிறப்பு சான்றிதழ் **ம.சா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ-**6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(ம.சா.ஆ.3 முதல் 6 வரையிலான ஆவணங்கள் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)

01.07.2018 ஆம் தேதி எதிர்மனுதாரர் மீது நான் கொடுத்த புகாரின் பேரில் சீர்காழி அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் வழங்கிய மனு ரசீது **ம.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது கணவர் பெயரில் உள்ள சொத்துக்களுக்கான சிட்டா கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.8 ஆக எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

எனது தரப்பு சாட்சியத்தையும் சான்றாவனத்தையும் ஏற்று மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய ஒாத்திவைக்கப்படுகிறது.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**DVC No.5/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Rajasundari | Prosecution | P.W- 1 Chief |
| Husband Name | Srinath | Defence | |
| Village | Valliamani Street, Movore | Taluk | Kattumanar kovil |
| Calling | | Religion | |
| Age | 37 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>06.01.2023.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். 1-ம் எதிர்மனுதாரர் எனது கணவர் 2, 3 ஆம் எதிர்மனுதார்கள் எனது மாமாமனார், மாமியார். மேற்படி நபர்கள் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துனேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் மனுவில் கோரிய பரிகாரத்தை எனக்கு வழங்கியும் எதிர்மனுதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

எனது திருமண பத்திரிக்கை அசல் தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ-1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

சீர்காழி அனைத்து மகளீர் காவல் நிலைய ஆய்வாளரின் மேல் நடவடிக்கைக்கான கடிதம் **ம.சா.ஆ-2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

நான் எதிர்மனுதார்கள் மீது கொடுத்த புகார் மீது அனைத்து மகளீர் காவல் நிலைய மனு ரசீது **ம.சா.ஆ-3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

சீர்வரிசை பட்டியல் மற்றும் 20.08.2021, 26,07.2021 ஆம் தேதியிட்ட நகை வாங்கியதற்கான ரசீது **ம.சா.ஆ-4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.